வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 12.12.2024 வியாழக்கிழமை இதழ் : 346 பக்கங்கள் : 12

# இந்தியாவின் ஒத்துழைப்பு, உதவி எப்போதும் எங்களுக்குத் தேவை!

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் கருத்து



யாழ்ப்பாணம், டிசெம்பர் 12

**இந்தியாவின் ஒத்துழைப்பும், உதவியும் எப்போதும் எங்களுக்குத் தேவை என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத் தினம் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது, மகாகவி சுப்பிரமணியம் பாரதியாரின் 142 ஆவது பிறந்த நாள் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது உருவப்படத்துக்கு ஆளுநர் உட்பட அதிதிகள் மலர்மாலை அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், எங்கள் சேவைகள் மெருகூட்டப்படுவதற்கு பயிற்சிகள் முக்கியம் என்று குறிப்பிட்டார். தாம் பதவிக்கு வந்த காலத்தில் இவ்வாறான பயிற்சிகளுக்கான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறவில்லை

11

# இந்திய மீனவர்களுக்கு அனுமதி எந்த திட்டமும் என்னிடமிருந்ததில்லை

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12

இந்திய மீனவர்கள் வடக்கு கடல் பரப்பில் மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கும் எந்தவொரு திட்டமும் கடந்த காலங்களில் தன்னிடம் இருந்ததில்லை என்று முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தற்போதைய பலவீனங்களை மறைக்கும் வகையில் கடற்றொழிலாளர்களை திசை திருப்ப

11

# சிறுவர்களின் ஆபாச வீடியோ; உடன் விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, டிசெ. 12

இணையத்தில் இலங்கை சிறார்களின் ஆபாச காணொளிகள் மற்றும் படங்களைச் சிலர் வெளியிடுவதாக நெக்மெக் என்ற நிறுவனம் வெளியிட்டுள்ள தகவல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணிக்கத்துக்குக் கொழும்பு நீதவான் நீதிமன்றம்

11

# யாழில் பரவுவது எலிக் காய்ச்சலா? விசாரணையில் சுகாதார அமைச்சு

கொழும்பு, டிசெ. 12

யாழ். மாவட்டத்தில் கண்டறியப்படாத காய்ச்சல் நிலை பரவி வருவதாக குறிப்பிட்ட சுகாதார அமைச்சின் தொற்றாநோய் பிரிவின் வைத்தியர் குமுது வீரக்கோன், இந்த நிலை எலிக்காய்ச்சலா என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் தொடர்பில் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குறித்த பகுதிகளில் காய்ச்சல் மற்றும் சுவாச பிரச்னைகள் பதிவாகி இருப்பதாகவும், தற்போது சம்பந்தப்பட்ட காய்ச்சல் நோயாளிகளிடம் இருந்து மாதிரிகளை எடுத்துச் சோதனை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

2023 ஆம்

11

# இம்மாத இறுதிக்குள் யாழில் கடைசி நலன்புரி நிலையமும் மூடப்படும்

## பிரிட்டன் பிரதிநிதியிடம் அரச அதிபர் உறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணத்தில் நலன்புரி நிலையங்களிலுள்ள குடும்பங்களுக்கு காணிகள் வழங்கி, வீடுகள் அமைத்து கொடுத்து வருவதாகவும் மீள்குடியேற்ற பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

இதேவேளை, ஒரே ஒரு நலன்புரி நிலையத்தில் இரண்டு குடும்பங்கள் உள்ளதாகவும்

11



# மர்மக் காய்ச்சலால் 7 பேர் உயிரிழப்பு! தடுப்பு நடவடிக்கையை விரைவாக்குக!!

## வடக்கு ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ. 12

வடக்கு மாகாணத்தில் அடையாளம் காணப்படாத காய்ச்சல் காரணமாக இன்று மாலை வரையில் 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக தேவையேற்படின் மாவட்டத்தின் ஏனைய சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளிலிருந்து ஆளணியினரைப் பெற்றுப் பயன்படுத்துமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனுக்கு, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆலோசனை வழங்கினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 6 பேரும், முல்லைத்தீவு

11

## மழையால் 8 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ. 12

கடும் மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் நேற்றையதினம் இரு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர்

11

# இரணைமடுக்குளத்தின் 2 வான் கதவுகள் திறப்பு

## தாழ் நிலப்பகுதி மக்களே அவதானம்

கிளிநொச்சி, டிசெ. 12

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று மாலை முதல் தொடர்ச்சியான மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகிறது. ஏற்கனவே வான் பாய்ந்த சிறிய குளங்கள் மீண்டும் வான் பாய ஆரம்பித்துள்ளன.

இரணைமடுக்குளத்தின் 14 வான் கதவுகளில் இரண்டு வான் கதவுகள் 6 இஞ்சி அளவில் நேற்று மாலை திறந்து விடப்பட்டுள்ளது.

எனவே தாழ் நிலப்பகுதி மக்களை தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசன திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

(அ)

# மர்ம காய்ச்சலால் பாதிப்புற்ற 33 பேர் இதுவரை அடையாளம்

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்.மாவட்டத்தில் தற்போது மர்மகாய்ச்சல் பரவி வருவதால் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

இதுவரை 33 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவரால் நேற்று

11

# காய்ச்சல் ஏற்பட்டு 5 நாள்களில் இளம் குடும்பப் பெண் மரணம்!

## பருத்தித்துறை ஓடக்கரையில் துயரம் மர்மக் காய்ச்சலால் மக்கள் அச்சத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 12

ஐந்து நாள் காய்ச்சலினால் பிடிக்கப்பட்டிருந்த ஒரு பிள்ளையின் தாயார் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள சம்பவம் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் கல்லூரி வீதி, ஓடக்கரை, பருத்துறையைச் சேர்ந்த சுரேஷ்குமார் ரஞ்சிதா (வயது- 33) என்பவராவார்.

யாழ். மாவட்டத்தில் பரவி வரும் மர்மக்

11

# மகிந்தவின் 116 காவலர்கள் நீக்கம்

கொழும்பு, டிசெ. 12

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை நீக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கொள்கை மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாது காப்புப் பிரிவினருக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய கடிதம் மூலம் பிரதி பொலிஸ் மா

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளபாடங்கள் தருவதாகக் கூறி பெரும்தொகை பணம் மோசடி!

## கோண்டாவிலில் சிக்கினார் சந்தேகநபர்

யாழ்ப்பாணம், டிசெ. 12

**தளபாடங்களை தருவதாகக் கூறி யாழ்ப்பாணத்தில் பெருமளவான நிதி மோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் இன்றையதினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.**

இவர் 20 இலட்சத்து 32ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை தருவதாகக் கூறி, வவுனியாவில் உள்ள நபர் ஒருவரை ஏமாற்றி பணத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டு ஒரு மாத காலமாக தலைமறைவாக இருந்துள்ளார்.

இந்நிலையில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமஹா தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கோண்டாவில் பகுதியில் வைத்து பொலிஸ் விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

# மகாகவி 142 ஆவது நினைவு யாழ். கலாசார மண்டபத்தில்



யாழ்ப்பாணம், டிசெ. 12

இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் ஐ ரெக் தின நிகழ்வு மற்றும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 142 ஆவது நினைவு தினம் ஆகியன நேற்று யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிறியர் சிறிசற்குணராஜா, வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 142 ஆவது நினைவு தினத்தினை முன்னிட்டு அவருடைய உருவப்படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவு உரைகளையும் இடம்பெற்றன. (அ)

# ஒபெக் நிதியத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ. 12

சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்துடன் கடன் உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் அமுல்படுத்தப்படும் விரிவாக்கப்பட்ட நிதிவசதி திட்டத்துக்கு இணையாக இலங்கையில் மறுசீரமைப்பு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

குறித்த திட்டத்துக்கு நிதியளிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தினால் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொள்கை அடிப்படையிலான கடன் திட்டத்தின் கீழ் 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதற்குக் குறித்த நிறுவனம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, குறித்த கடன் தொகையைப் பெறுவதற்கான உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# மன்னார் வர்த்தக சந்தை நேற்று

மன்னார், டிசெ. 12

மன்னார் மாவட்ட வர்த்தக சந்தையும், கண்காட்சியும் நேற்றைய தினம் காலை 9.30 மணியளவில் மன்னார் நகர பிரதேச செயலக முன்றலில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் கலந்து கொண்டு வர்த்தக சந்தை மற்றும் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

உதவி மாவட்ட செயலாளர் எஸ்.பரந்தாமன், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் உட்பட அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர். வர்த்தக சந்தை மற்றும் கண்காட்சியில் உள்ளூர் சுய தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதோடு, மலிவு விற்பனையும் இடம்பெற்றது. (அ)

# கடற்படைத் தளபதியுடன் பிரான்ஸ் தூதுக்குழு பேச்சு

கொழும்பு, டிசெ. 12

பிரான்ஸின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளருக்கும் கடற்படை தளபதிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பிரான்ஸின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புத் துறையின் பிரதிப் பணிப்பாளர் ஜெரோம் ப்ரெசன் மற்றும் புது டில்லியில் உள்ள பிரான்ஸ் தூதரகத்தின் சார்பில், இலங்கையின் பிரான்ஸ் கடற்படை ஆலோசகராக பணியாற்றும் கர்னல் எமானுவேல் பெல்ட்ரியாக்ஸ் உட்பட பிரான்ஸ் தூதுக்குழுவினர் இந்த சந்திப்பில் இணைந்து கொண்டனர்.

கடற்படைத் தளபதி மற்றும் பிரான்சின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புத் துறையின் துணைப் பணிப்பாளர் உள்ளிட்ட பிரான்ஸ் தூதுக்குழுவினர் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகள் குறித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பைக் குறிக்கும் விதமாக, இரு தரப்பினருக்கும் இடையே நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன. (அ)

# அனர்த்த காலங்களில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வேண்டும்

## வரவு - செலவு திட்டத்தில் உள்ளடக்க கோரிக்கை




யாழ்ப்பாணம், டிசெ. 12

அனர்த்த காலத்திலோ அல்லது அனர்த்த முன்னெச்சரிக்கையான காலப்பகுதிகளிலோ கடலுக்கு செல்லாத மீனவக் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் ஜான்சன் பிரிறாடோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு இளம் மீனவ கூட்டமைப்பின் ஊடகச் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புயல் எச்சரிக்கைகள் விடுக்கப்படும் நேரங்களில் மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஏனெனில் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் கடலில் தரித்து நின்று மீன்பிடியில் ஈடுபடுகின்ற நிலையில் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் மீனவ மக்கள் ஒவ்வொரு நாளும் கடலுக்குள் செல்ல வேண்டும்.

புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டால் கடலுக்குள் செல்ல முடியாத சந்தர்ப்பங்களில் அவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

ஆகவே, எதிர்வரும் வருடம் ஆரம்பப் பகுதியில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் படவுள்ள நிலையில் ஜனாதிபதி மற்றும் கடல் தொழில் அமைச்சர், மீனவ மக்களின் நலன் கருதி அனர்த்த காலத்தில் நிவாரணம் வழங்குவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-05)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆங்கிலக் கவிதை நூல் வெளியீடு





யாழ்ப்பாணம், டிசெ. 12

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆங்கில நெறி ஆசிரிய மாணவர்களால் எழுதப்பட்ட மலரும் மொட்டுகள் என்ற ஆங்கில கவிதைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நேற்று புதன் காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்றது

இந்த நிகழ்வில் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி ஆங்கில பாட விரிவுரையாளரும் கலாசாலையில் இடம்பெற்றுவரும் கல்விமாணி கற்கை நெறி இணைப்பாளருமாகிய மா. பிரபாகரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார் . நூலின் முதற் பிரதியை விரிவு ரையாளர் வேல் நந்தகுமார் பெற்றுக்கொண்டார். நிகழ்வுகளை ஆங்கில நெறி ஆசிரிய மாணவர் சி. மயூரன் முன்னிலைப்படுத்தினார். ஆசிரிய மாணவி ஓரிமா ஜெல்சியா நன்றியுரை ஆற்றினார்.

கலாசாலையின் ஆங்கில பாட விரிவுரையாளர் அருள்லிங்கம் சுஜீவாவின் நெறிப்படுத்தலில் ஆசிரிய மாணவர்கள் ஆக்கிய கவிதைகள் நூலில் இடம்பெற்றுள்ளன.

நிகழ்வின் நிறைவில் ஆசிரிய மாணவர்கள் தாம் எழுதிய கவிதைகளை ஆற்றுகை செய்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.12.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 27
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழர்களுக்கான மனித உரிமை

"எங்கள் உரிமைகள் - எங்கள் எதிர்காலம் - இப்போதே எங்கள் உரிமை" இதுதான் இந்த ஆண்டுக்கான மனித உரிமைகள் தின வாசகமாகும். 1948ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் பத்தாம் திகதி, அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் உள்வாங்கப்பட்டு, பிரகடனம் செய்யப்பட்டது. அதன் நினைவாகவே ஒவ்வோர் ஆண்டும் டிசெம்பர் மாதம் குறித்த தினம் நினைவு கொள்ளப்படுகின்றது.

2009இற்கு பின்னரான ஈழத் தமிழர் அரசியல் நகர்வில் மனித உரிமைகள் என்னும் விடயம் புதிதாக உள்வாங்கப்பட்டது. புதிதாக என்று சொல்வதில் ஒரு விடயமுண்டு - அதாவது, அதற்கு முன்னர் மனித உரிமைகள் என்னும் விடயம் ஈழ அரசியலில் ஒரு விடயமாக இருந்ததில்லை. ஏனெனில் ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடப் புறப்பட்ட எந்தவோர் ஆயுத இயக்கமும் மனித உரிமைகளை மதித்ததில்லை - ஆகக் குறைந்தது ஒரு பொருட்டாகக் கூட எடுத்ததில்லை. ஆனால் இறுதி யுத்தமானது, பல்லாயிரக்கணக்கான விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களின் இறப்பில் முடிவுற்றதைத் தொடர்ந்தே, ஈழ அரசியல் மனித உரிமைக் கோரிக்கையாக உருமாறியது.

கடந்த பதினைந்து வருடங்களாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையை அடிப்படையாகக் கொண்டும், அங்கு வெளியாகும் பிரேரணைகளின் உள்ளடக்கத்தைக் கொண்டுமே ஈழ அரசியல் உயிர் வாழ்கின்றது. இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் சபை உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் போர் வலயத்திலிருந்து ஐ.நா. பணியாளர்களை வெளியேறுமாறு கூறிய போது அனைவருமே வெளியேறிவிட்டனர். ஓர் அரசு வெளியேறச் சொன்னால் அதன் பின்னர் சர்வதேச முகவர் அமைப்புக்கள் எவையுமே இருக்காது. இதுதான் அவர்களது நடைமுறை.

ஐக்கிய நாடுகள் சபை பார்த்துக் கொண்டிருக்கும் போதே அனைத்தும் நடந்து முடிந்தது. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளராக இருந்தவர், கோடன் வைஸ் ஆவார். இறுதிக்கட்ட யுத்தம் பற்றிய தனது அனுபவங்களை தொகுத்து, 'கூண்டு' என்னும் பெயரில், அவர் ஒரு நூலை எழுதியிருக்கின்றார். அந்த நூலின் முன்னுரையில், நான் எனது வீட்டின் மொட்டை மாடியிலிருந்து எனது அடுத்த நூலுக்கான குறிப்புக்களை எடுத்துக் கொண்டிருக்கின்றேன். என்னைப் போன்ற ஒரு வெளிநாட்டவரை இது போன்ற விடயங்கள் பாதிப்பதில்லை - இது அடிப்படையில் அந்த மக்களுக்கான பிரச்சினையாகும். இவ்வளவுதான் ஒரு வெளிநாட்டவரின் எல்லை.

இறுதி கட்ட யுத்தத்தின் போது இலங்கை விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்தமை தொடர்பிலும் ஓர் அறிக்கை வெளியாகியிருக்கின்றது. அதற்கு தலைமை தாங்கியவரே அதிகம் ஐக்கிய நாடுகள் சபையை நம்பியிருக்காதீர்கள் என்று கூறியிருக்கின்றார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஒரு முறை கூறியிருந்தார் - அதாவது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது, புவிசார் அரசியல் நலன்களாலும் குறுகிய தேசியவாத நலன்களாலும் கட்டுண்டு கிடக்கின்றது - இதற்கு எனது சொந்த நாடான தென்னாபிரிக்கா கூட விதிவிலக்கல்ல என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் கடந்த பதினைந்து வருடகால மனித உரிமைக் கோஷங்கள் தமிழ் மக்களின் வாழ்வில் சிறிய முன்னேற்றத்தைக் கூட ஏற்படுத்தவில்லை. இனியும் ஏற்படுத்துமா என்னும் கேள்வியுடன்தான் நாட்கள் நகர்கின்றன.

இந்த விடயத்தில் வெளிநாட்டு முகவர் அமைப்புக்களை நம்பியிருப்பதை விட, இருக்கின்ற வாய்ப்புகள் என்ன என்பதை துல்லியமாக கணித்து, கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் மட்டுமே ஈழத் தமிழர்கள் அவர்களின் அரசியலில் முன்னோக்கி பயணிக்க முடியும்.

# சிறுமிகளுக்கு எதிரான வன்முறை வடக்கு மாகாணத்தில் அதிகரிப்பு!

## ஆளுநர் வேதநாயகன் வேதனை



யாழ்ப்பாணம் டிச 10

சிறுமிகளுக்கு எதிரான பால்நிலைசார் வன்முறைகள் அதிகரித்து வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கவலை வெளியிட்டுள்ளார்.

'கிறிஸலைஸ்' நிறுவனத்தின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழில்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் ஆதரவுடன், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை இல்லா தொழிக்க ஒன்றிணைவோம் என்ற தொனிப்பொருளில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான 16 நாட்கள் செயல்பாட்டியத்தின் இறுதிநாள் நிகழ்வு வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பெண்கள் தங்களுக்கு எதிரான வன்முறை எந்தத் தளத்தில் நிகழ்ந்தாலும் முறைப்பாடுகளைச் செய்ய முன்வரவேண்டும். அது தொடர்பான பரந்துபட்ட விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். அரச திணைக்களங்களில் நடைபெறும் பால்நிலை வன்முறைகள் தொடர்பில் பெண்கள் முறைப்பாடு செய்தாலும் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்போது அதனை மீளப்பெறும் தன்மை இருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஆளுநர், அவ்வாறு செய்வதால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை இருப்பதாகவும் கூறினார்.

இந்த நிகழ்வில் அனுபவப் பகிர்வை வெளிப்படுத்திய முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த செயல்பாட்டாளர் திருமதி கலைச்செல்வியை வடக்கு மாகாண ஆளுநர் தனது உரையில் பாராட்டினார். அரச அலுவலகங்களிலும், பொதுப் போக்குவரத்திலும் அவருக்கு நேர்ந்த பால்நிலை வன்முறை தொடர்பில் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்து, நடவடிக்கைக்கு உந்துதலாக இருந்தமை போன்று ஏனைய பெண்களும் செயல்பட வேண்டும் என ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

தற்போதைய காலகட்டத்தில் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன. இரண்டாவது திருமணத்தை செய்து கொள்ளும் பெண்கள், தமது முதலாவது கணவரது பிள்ளைகளை துன்புறுத்துவதாகக் குறிப்பிட்டார். இவ்வாறான சம்பவங்கள் துடைத்தெறியப்பட வேண்டும்.

எமது சமூகத்தின் பண்பாட்டு முறைமை இன்று தலைகீழாகிச் செல்வதாகவும் மிருகங்களை விட மிக மோசமாக சில மனிதர்கள் நடந்து கொள்வதாகவும் ஆளுநர் வேதனை வெளிப்படுத்தினார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த செயல்பாட்டாளர்களால் தயாரிக்கப்பட்ட மனுவும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலர் பொ. வாகீசன், மன்னார் மாவட்ட அரச அதிபர் க. கனகேஸ்வரன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் க. சிறிமோகனன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (எ-02)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சிறீபவானந்தராஜா எம்.பி. விஜயம்


யாழ்ப்பாணம், டிசெ. 12

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு பாராளுமன்ற உறுப்பினரான வைத்தியர் எஸ். சிறீபவானந்தராஜா நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை விஜயம் செய்தார்.

அதன்போது, வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஜி. ரஜீவை சந்தித்து வைத்திய சாலை தொடர்பாக கலந்துரையாடியதுடன் சத்திர சிகிச்சைப் பிரிவு மற்றும் இரத்த வங்கி போன்றன வற்றின் தொழிற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவது மற்றும் வினைத்திறனாக்குவது தொடர்பிலும் நடமாடும் சேவைகளை மக்களுக்கு வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மற்றும் வைத்தியர்கள், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.வினோதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் - 12 வியாழக்கிழமை
குரோதி வருடம் -கார்த்திகை 27
நல்ல நேரம்: 10.30-12.00
ராகு காலம்: 1.30 - 2.00
திதி: துவாதசி




**மேடம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். திடீர் பயண செலவுகளால் திணறுவீர்கள் பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உறவினர்கள், நண்பரகள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். கடமை உணர்வுடன் செயல்படும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். உடல் நலம் சீராகும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகள் தடைப்பட்டு முடியும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறை குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள். டென்ஷன் அதிகரிக்கும்.

**கன்னி**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். பொறுப்புகள் தேடிவரும்.

**துலாம்**
எதிர்பாராத பணவரவு கிடைக்கும். பிள்ளைகளால் உறவினர் நண்பர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்கு வீர்கள். வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும்.

**தனுசு**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. புது வேலை கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும்.

**மகரம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசாங்கத்தில் அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திவரும். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். முகப்பொலிவு கூடும். வர வேண்டிய பணம்கைக்கு வரும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் சிக்கிக் கொள்ளாதீர்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

# வனவளத் திணைக்களத்தால் வடக்கு மக்களுக்கு நெருக்கடி

## பிரிட்டன் பிரதிநிதியுடனான சந்திப்பில் ஆளுநர்



யாழ்ப்பாணம், டிசெ. 12

“தமிழ் மக்களின் காணிகள் கடந்த காலங்களில் அவர்கள் இடம்பெயர்ந்தபோது, வன வளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் தமது ஆளுகைக்கு உட்பட்டதாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டமையால் தற்போது சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

இந்த அரசாங்கத்தின் காலத்தில் தமது பிரச்னைகள் தீர்க்கப்படும் என்று மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்”- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

பிரிட்டன் தூதரகத்தின் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகளுக்கான முதனிலைச் செயலர் ஹென்றி டொனைட்டிடம் ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அறிவதே தனது பயணத்தின் நோக்கம் என ஹென்றி குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து இன்னமும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

விவசாயிகள் வாழ்வாதாரம் இன்மையால் கடுமையான பின்னடைவுகளைச் சந்தித்துள்ளனர். வடக்கு மாகாண மக்களின் முக்கியமான பிரச்னையாக இது உள்ளது எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட சில வீட்டுத் திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அவை விரைவில் பூர்த்தியாக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

வலி. வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் நீண்ட காலம் இருந்த வீதி மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டமை சிறந்த நடவடிக்கை. மக்கள் மேலும் வீதிகளை, காணிகளை விடுவிக்கக் கோருகின்றனர் என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். அத்துடன் பாதுகாப்புத் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்டிருந்த சோதனைச் சாவடிகள் மற்றும் வீதித் தடைகள் என்பன அகற்றப்பட்டுள்ளன.

தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுளளமையால் அதிகளவில் வருகின்றனர். அடுத்த ஆண்டு முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையிலும் இளையோருக்கான வேலைவாய்ப்புகளை வழங்கும் நோக்கிலும் பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கப்படவுள்ளதாகவும், காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பொதிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் விரைவில் அதற்கும் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் தமிழகத்தில் சுமார் ஓர் இலட்சம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக உள்ளனர். அவர்கள் நாடு திரும்பினால் அவர்களுக்குரிய வாழ்வாதார, வதிவிட உதவிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தின் பிரதான வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டபோதும் உள்ளக வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. எதிர்காலத்தில் அவற்றையும் விரைந்து அபிவிருத்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும், தற்போதைய அரசாங்கத்தின் காலத்திலேயே அபிவிருத்திகளைச் செய்து முடிக்கலாம் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, ஐ. நா. முகவர் அமைப்புகள் ஊடாக வடக்கு மக்களுக்காக கடந்த காலங்களில் பிரிட்டன் அரசாங்கம் மேற்கொண்ட உதவிகளுக்கு ஆளுநர் நன்றிகளை தெரிவித்தார்.

(எ-05)

# மர்ம காய்ச்சலால் ஐவர் மரணம் தடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களில் ஐவர் திடீர் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தமை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரனுடன் கலந்துரையாடினார்.

இதன்போது, வடமராட்சியைச் சேர்ந்த ஐவர் உயிரிழந்ததாகவும் அவர்களின் உயிரிழப்புக்கான காரணம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கலந்துரையாடல் நடைபெற்றதாகவும் ஆளுநரிடம் தெரிவித்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், எலிக்காய்ச்சலாக இருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகவும் அதற்கு அமைவாக தடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

புலோலி மற்றும் கற்கோவளம் பிரதேசங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அந்தப் பகுதியில் முதல் கட்டமாக இந்தத் தடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

தொடர் நடவடிக்கைகள் தொடர்பில் அறியத்தருமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

(எ- 05)

# “மாணிக்கவாசகரும் அச்சப்பத்தும்” சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 12

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 35 தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை 13 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசக சுவாமிகள் குருவணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை இளஞ் சைவப்புலவர் , பிரசங்கச்சுடர் த. மனோஜ்குமார் “மாணிக்கவாசகரும் அச்சப்பத்தும்” என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுக திட்டத்துக்கு அமெரிக்க உதவி தேவையில்லை

## நிராகரித்தது அதானி நிறுவனம்

கொழும்பு, டிசெ. 12

**இலங்கை துறைமுகத் திட்டத்திற்கு நிதியளிக்க தனது சொந்த வளங்களைப் பயன்படுத்துவதாகவும், அமெரிக்க நிதியுதவியைப் பெறப் போவதில்லை என்றும் அதானி துறைமுகம் அண்ட் ஸ்பெஷல் எகனாமிக் ஜோன் நிறுவனம் அறிவித்துள்ளது.**

அதேநேரம், இலங்கையில் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு சர்வதேச முனையம் திட்டம் சிறப்பாக முன்னேறி வருவதாகவும், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் செயல்படத் தொடங்கும் என்றும் நாங்கள் தெரிவிக்க விரும்புகிறோம் என்று அதானி குழுமத்தின் முதன்மை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டமானது நிறுவனத்தின் உள் திரட்டல்கள் மற்றும் மூலதன மேலாண்மைத் திட்டத்தின் மூலம் நிதியளிக்கப்படும்.

யு.எஸ். இன்டர்நஷனல் டெவலப்மென்ட் பினான்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து நிதியுதவிக்கான எங்கள் கோரிக்கையை நாங்கள் திரும்பப் பெற்றுள்ளோம் என்றும் நிறுவனம் மேலும் சுட்டிக்காட்டியது.

கடந்த ஆண்டு நவம்பரில் அமெரிக்காவின் டி.எவ்.சி நிறுவனம், இலங்கையில் கொழும்பு துறைமுகத்தின் அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் இயக்கத்திற்கு உதவியாக 553 மில்லியன் டொலர்களை வழங்க ஒப்புக்கொண்டது.

அதானி போர்ட்ஸ், இலங்கை கூட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு சர்வதேச முனையம் அபிவிருத்தி செய்யப்படுகிறது.

இத் திட்டம் 2021 செப்ரெம்பரில் தொடங்கப்பட்டது.

இது இலங்கையின் மிகப் பெரிய மற்றும் ஆழமான கொள்கலன் முனையமாக இருக்கும் என்பதுடன் 1,400 மீற்றர் நீளம் மற்றும் 20 மீற்றர் ஆழம் கொண்டதாக அமையும்.

கொழும்பு துறைமுகம் இந்தியப் பெருங்கடலில் மிகப் பெரிய மற்றும் பரபரப்பான துறைமுகமாகும். மேலும் இது 2021 முதல் 90 வீதத்திற்கும் அதிகமான சுறுசுறுப்பான பயன்பாட்டில் இயங்கி வருகிறது.

புதிய முனையம் வங்காள விரிகுடாவில் வளர்ந்து வரும் பொருளாதாரங்களை பூர்த்தி செய்யும், முக்கிய கப்பல் வழித்தடங்களில் கப்பல்கள் இலங்கையின் பிரதான துறைமுகத்தை பயன்படுத்தி கொள்ளும்.

இந்த புதிய முனையத்தின் ஆண்டு பொருட்கள் கையாளும் திறன் 3.2 மில்லியன் டொலரை தாண்ட வாய்ப்புள்ளதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. (அ)

# புதிய ஜனநாயக முன்னணியின் தேசிய பட்டியலில் பைசர் முஸ்தபா

கொழும்பு, டிசெ. 12

புதிய ஜனநாயக முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினராக பைசர் முஸ்தபா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் சிலிண்டர் சின்னத்தின் கீழ் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணி மூன்று ஆசனங்களை கைப்பற்றிய நிலையில் இரண்டு தேசிய பட்டியல் ஆசனங்கள் கிடைத்திருந்தன.

அதன்படி, ரவி கருணாநாயக்க கடந்த தினம் தேசியப் பட்டியல் ஆசனத்தில் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், மீதமிருந்த தேசிய பட்டியல் ஆசனத்திற்கு பைசர் முஸ்தபா தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# சுகாதாரம், ஊடக, விவசாய அமைச்சுக்களின் செலவு தலைப்பு தொடர்பில் கலந்துரையாடல்

கொழும்பு, டிசெ. 12

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை தயாரிப்பதற்கான அமைச்சரவை மட்டத்திலான ஆரம்ப கலந்துரையாடல்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்றுவரும் நிலையில், அதன் ஒரு அங்கமாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சுகளின் செலவுத் தலைப்பு தொடர்பிலான வரவு செலவு திட்ட பரிந்துரைகள் குறித்த கலந்துரையாடல் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, ஜனாதிபதியின் செயலாளர் சனத் நந்திக குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உட்பட அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செலவுத் தலைப்பு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளருடன், விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டீ.பி.விக்ரமசிங்க உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

# பாதுகாப்பு பிரதி அமைச்சர் கடற்படைத் தளபதி சந்திப்பு!

கொழும்பு, டிசெ. 12

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, பாதுகாப்பு பிரதி அமைச்சர், மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவை நேற்று முன் தினம் அவரது அலுவலகத்தில் மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, பாதுகாப்பு பிரதி அமைச்சரும் கடற்படைத் தளபதியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான பல விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். சுமுகமான கலந்துரையாடலின் முடிவில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவிற்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கினார். (அ)

# மீன்பிடித்துறை இயல்பு நிலைக்கு மிகவிரைவில் கொண்டுவரப்படும்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 12

பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிப்பை எதிர்நோக்கியுள்ள மீன்பிடித் துறையை இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்காக விசேட கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பொருளாதார நெருக்கடி காரணமாக மீன்பிடித் துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைக் குறைத்து மீன்பிடித் துறையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதே இதன் நோக்கமாகும்.

அதனடிப்படையில் 2024.10.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் 06 மாதகாலத்திற்கு எரிபொருளாக டீசலைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் படகு உரிமையாளர்களுக்கு ஒரு லீற்றருக்கு 25 ரூபா என்ற அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், எரிபொருளாக மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகின்ற கடற்றொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 15 லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் மாதமொன்றுக்கு உயர்ந்தபட்சம் 25 நாட்களுக்கு மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 25ரூபாவாகவும் மீன்பிடித்துறையை இயல்புநிலைக்குக் கொண்டு வரும் கொடுப்பனவாகப் பெற்றுக் கொடுப்பதற்கு 2024.08.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, எரிபொருளாக மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகின்ற சிறிய படகுகளுக்குரிய இச்சலுகையை வழங்குவதற்கு மிகவும் வசதிப்படுத்தும் நோக்கில் மீன்பிடி மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட இயங்குநிலையிலுள்ள சிறிய மீன்பிடிப் படகு உரிமையாளர்களுக்கு மாதாந்தம் 9,375 ரூபா கொடுப்பனவு மீன்பிடித்துறையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கான கொடுப்பனவாக 2024.11.01 ஆம் திகதி தொடக்கம் 05 மாத காலத்திற்கு வழங்குவதற்கும், டீசல் மீன்பிடிப் படகு உரிமையாளர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற சலுகைகளை முற்கூட்டியவாறே வழங்குவதற்கும் மீன்பிடி, நீரியல்வள மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# ஜனாதிபதி, பொது நிர்வாக அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அங்கீகாரம்

கொழும்பு, டிசெ. 12

முன்னாள் ஜனாதிபதிகள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பங்களாக்கள், மற்றும் பல்வேறு பிரதேசங்களில் உள்ள ஜனாதிபதி மாளிகைகள் என்பவற்றை பொருளாதார ரீதியாகப் பயனுள்ளதாகப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான வழிமுறையை முன்மொழிவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பொது நிர்வாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஆகியோர் முன்வைத்த ஒருங்கிணைந்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி அரச நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் கீழ் கொழும்பு 07 ம்ற்றும் 05 பகுதிகளில் காணப்படும் 50 அரச பங்களாக்கல் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தினால் நிர்வாகிக்கப்படும் கொழும்பு, கண்டி, நுவரெலியா, மஹியங்கனை, அநுராதபுர ம், கதிர்காமம், யாழ்ப்ப ாணம், எம்பிலிபிட்டிய, மற்றும் பெந்தோட்ட ஆகிய பகுதிகளில் ஜனாதிபதி மாளிகைகளும் அமைந்துள்ளன. அவற்றில் அடிக்கடி பயன்படுத்தப்படும் கண்டி, கொழும்பு ஜனாதிபதி மாளிகைகள் தவிர்ந்த ஏனைய மாளிகைகளும், தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் காணப்படும் பல நாட்டின் தலைவர்கள் பலரும் உத்தியோகபூர்வ இல்லமாக பயன்படுத்திய கொழும்பு 02 இல் உள்ள விசும்பாய, பிரதமர் அலுவலகத்தின் கீழ் காணப்படும் நுவரெலியாவிலுள்ள பிரதமருக்கான உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட அரச பங்களாக்கல் என்பன இவ்வாறு பொருளாதார ரீதியில் பயனுள்ளவையாக மாற்றப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# தேங்காய் பிரச்னையை தீர்க்க அரசுக்கு உதவும் மல்கம் ரஞ்சித்!

கொழும்பு, டிசெ. 12

நாட்டில் நிலவும் தேங்காய் பிரச்சனையை தீர்க்க அரசாங்கத்துக்கு உதவுவதற்கு பேராயர் மல்கம் ரஞ்சித் கர்தினால் முன்வந்திருக்கிறார்.

அதற்கமைய, பேராயருக்குச் சொந்தமான தென்னந்தோப்புகளில் உள்ள தேங்காய்களை மானிய விலையில் அதாவது 130 ரூபாவுக்கு அரசுக்கு அவர் வழங்க உள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# சுகாதாரம், ஊடக அமைச்சுகளின் புதிய செயலராக அனில் ஜாசிங்க

கொழும்பு, டிசெ. 12

சுகாதார மற்றும் ஊடக அமைச்சுக்களின் புதிய செயலாளராக விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்கவினால் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவிடம் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை எரிசக்தி மேம்பாட்டுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதிவசதி!

## 30 மில்லியன் டொலர்கள் கிடைக்கும்

கொழும்பு, டிசெ. 12

**இலங்கையின் மின்சார சபைக்கு 30 மில்லியன் அமெ ரிக்க டொலர்கள் சிறிய செல வின நிதி வசதியை ஆசிய அபி விருத்தி வங்கி அங்கீகரித்துள்ளது.**

இலங்கைக்கான இந்த நிதி யளிப்பானது நாட்டின் தற்போ தைய மற்றும் எதிர்கால எரி சக்தி துறை திட்டங்களின் நிலைத்தன்மையை மேம்படுத் துவதற்கு உதவும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு அறிக் கையில் தெரிவித்துள்ளது.

குறிப்பாக எரிசக்தி திட்டங் களின் செயல்பாட்டு நிலைத் தன்மையை ஆதரிப்பதற்கும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கை அதிகரிப்பதற்கான முன்முயற்சிகளை ஊக்குவிப் பதற்கும், மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி துறையில் தனி யார் துறை பங்களிப்பை ஊக்கு விப்பதற்கும் என இலங்கைக் கான ஆசிய அபிவிருத்தி வங்கி யின் பணிப்பாளர் சுட்டிக்காட் டியுள்ளார்.

2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதா ரங்களில் இருந்து 70 வீத மின் சாரத்தை உற்பத்தி செய்வதற் கான இலங்கையின் இலக்கை ஆதரிப்பதில் இந்த நிதி ஒரு முக்கிய பங்கை வகிக்கும்.

மொத்த 30 மில்லியன் டொலர் வசதியில், 15 மில்லி யன் டொலர் மொரகொல்ல நீர்மின் நிலையத்தின் செயல் பாட்டு நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கு ஒதுக்கப் படும்.

மீதமுள்ள 15 மில்லியன் டொலர் புதுப்பிக்கத்தக்க ஆற் றல் உற்பத்தி, கட்டம் ஒருங்கி ணைப்பு ஆகியவற்றை எளிதாக் கும் நடவடிக்கைகளுக்கு உதவும்.

(அ)

# குற்றத் தடுப்பு பிரிவின் முன்னாள் பணிப்பாளருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, டிசெ. 12

கொழும்பு, குற்றத் தடுப்பு பிரிவின் முன்னாள் பணிப்பா ளர், உதவிப் பொலிஸ் அத்தி யட்சகர் நெவில் சில்வா நாளை வரை விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர் இரத்தினபுரி நீதிவான் நீதிமன் றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலை யிலேயே இந்த உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

கடத்தல் மற்றும் சட்டவி ரோதமாக சிறையில் அடைத் தல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார்.

(அ)

# அதிகரித்த விலைக்கு அரிசியை விற்ற 50 கடைகளுக்கு எதிராக நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 12

கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 50 கடைக ளுக்கு எதிராக நேற்று முன்தி னம் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் அரிசியை விற்பனை செய்பவர்களைக் கைது செய் யும் நடவடிக்கையும், இருப்புக் களை மறைத்து வைத்திருப்பவர் களை கைது செய்யும் நடவடிக் கையும் நேற்று முன் தினம் முதல் விஸ்தரிக்கப்படவுள்ள தாக அதன் பணிப்பாளர் அசேல பண்டார குறிப்பிட்டார். (அ)

# தீப்பிடித்து எரிந்த வீடு !

கொழும்பு, டிசெ. 12

வாதுவ, பொதுப்பிட்டி யவில் வீடொன்று தீப்பற்றி எரிந்துள்ளதாக வாத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

தீயினால் வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் கூறினர்.

தீ மளமளவென பரவியதை யடுத்து, பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் சேர்ந்து தீயை கட்டுப்படுத்தினர்.

எனினும் இந்த தீ விபத்தில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்பட வில்லை.

குறித்த வீட்டின் பெண் ஒருவர் விளக்கை ஏற்றி விட்டுச் சென்றதால், அது கீழே விழுந்து தீப்பிடித்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

எவ்வாறாயினும் தீ விபத் துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவ பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.

(அ)

# கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு மனைவி கொலை! கணவன் கைது!!

கொழும்பு, டிசெ. 12

மாத்தளை, லக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லக்கேகல பிரதேசத்தில் கணவனால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மனைவி கொலை செய்யப்பட் டுள்ளதாக லக்கலை பொலிஸ ார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் மாத்தளை, லக்கேகல பிரதேசத் தைச் சேர்ந்த 44 வயதுடையவர்.

கணவன், மனைவிக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ ார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நப ரான கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லக்கலை பொலிஸார் மேற்கொண்டுள் ளனர்.

(அ)

# சீன அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்த பிரதமர் ஹரிணி



கொழும்பு, டிசெ. 12

2025ஆம் ஆண்டுக்கான இலங்கையிலுள்ள சகல பாட சாலைகளினதும் பிள்ளைகள் மற்றும் ஊழியர்களுக்கான சீரு டைகளை வழங்கிய சீன அர சாங்கத்துக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொள்வதாக பிர தமர் ஹரிணி அமரசூரிய தெரி வித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகள் வழங் கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சீன அரசாங்கத்தின் மானி யமாக பெறப்பட்ட பாடசாலை சீருடைகளை சீன தூதுவர் கீ சென் ஹொங் நேற்று முன் தினம் பிற்பகல் கொழும்பு துறைமுக சர்வதேச கொள்கலன் முனை யத்தில் வைத்து கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் கையளித்தார்.

2025 ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைகளின் தேவை 11,817 மில்லியன் மீற்றர் துணி மற்றும் பாடசாலைச் சீருடைகள் வழங்கப்படவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 4,640,086 ஆகும். அதன்படி, 2025 ஆம் ஆண்டுக்கான பாட சாலைச் சீருடைகளின் முழுத் தேவையும் சீன மக்கள் குடிய ரசால் மானியமாக வழங்கப்பட் டது.

இங்கு கருத்து தெரிவித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, கல்வி எமது நாட்டுக்கு மிக வும் முக்கியமானது. எமது அர சாங்கம் கல்விக்கு அதிக முன் னுரிமை அளித்து வருகிறது. நாம் அபிவிருத்தி அடைய கல்வி ஒரு அடிப்படை வழிமு றையாகும். எந்தவொரு சமூக-பொருளாதார வேறுபாடு அல்லது அந்தஸ்தைப் பொருட் படுத்தாமல் அனைத்து பிள்ளை களும் கண்ணியத்துடன் கல் வியை அணுக கல்வியில் முத லீடுகள் செய்யப்பட வேண்டும். அதற்கான பல முன்மொழி வுகளை நாங்கள் ஏற்கனவே முன்வைத்துள்ளோம்.

பாடசாலைச் சீருடைக்கான பொருட்களை வழங்குவதில் சீனாவின் பெருந்தன்மை எங்க ளுக்கு மிகவும் முக்கியமானது. இல்லாவிட்டால் இதற்கான நிதியை நாங்கள் தேடவேண் டியிருக்கும். 2025 ஆம் ஆண் டில், நமது நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் உள்ள அனைத்து பிள்ளைக ளுக்கும் சீருடை வழங்கும் பணியை சீனா மேற்கொண் டுள்ளது. இது சீனாவிடமிருந்து கிடைக்கும் முக்கியமான நன்கொடை என்றும், இதற்கு அரசாங்கம் நன்றி கூறுகிறோம்- என்றார்.

(அ)

# அதிகரித்த விலைக்கு அரிசியை விற்றால் 1977இற்கு அழையுங்கள்

கொழும்பு, டிசெ. 12

அரசாங்கத்தினால் வழங் கப்படும் அதிகபட்ச விலைக்கு மேல் அரிசியை விற்பனை செய் யும் வர்த்தகர்களை தேடும் வகையில் சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்படவுள்ளதாக நுகர் வோர் அதிகார சபை தெரிவித் துள்ளது.

கடந்த 9ஆம் திகதி வெளி யிடப்பட்ட அரிசிக்கான அதிக பட்ச விலையை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தலின்படி, இந்த தீர்மானம் மேற்கொள் ளப்பட்டதாக அந்த அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் தெரிவித்தார்.

புதிய அரிசி விலை அறி விக்கப்பட்டுள்ள பின்னணியில், அதற்கு மேல் அரிசி விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்ப டும் என்றும் அவர் கூறினார்.

"எனவே, வர்த்தக சமூகம், உற்பத்தியாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் நாங்கள் அறிவித்த விலைக்கு ஏற்ப அரி சியை கொள்வனவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.

முறைகேடாக அல்லது அதிகப்படியாக அரிசி விற் பனை நடந்தால், நுகர்வோர் ஆணையத்தின் 1977 என்ற எண் ணுக்கு அழைத்து முறைப்பாடு செய்யலாம்.

மேலும் நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட அலுவ லகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யலாம்."-என்று அவர் குறிப்பிட்டார்.

(அ)

# அஹுங்கல்ல கடலில் மூழ்கிய வெளிநாட்டு பிரஜைகள் மீட்பு!

கொழும்பு, டிசெ. 12

அ/ஹங்கல்ல பொலிஸ் பிரி வுக்குட்பட்ட கடலில் நீராடச் சென்ற வெளிநாட்டு பிரஜை ஒருவரும் பெண்ணொருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட் டுள்ளனர்.

இவ்விபத்து நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்றுள் ளதுடன், சம்பவ இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உயிர்காப்பு உத்தி யோகத்தர்கள் வெளிநாட்டுத் தம்பதிகளை மீட்டு உடன டியாக சிகிச்சை அளித்துள் ளனர்.

விபத்தில் மீட்கப்பட்ட வெளிநாட்டவர்கள் 29 வய தான ருமேனிய பிரஜை என வும், பெண் 30 வயதான சீனப் பிரஜை எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அ/ஹங்கல்ல பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பொலிஸ் உயிர்காப்பு பிரிவைச் சேர்ந்த பொலிஸார் இந்த உயர் காப்பு பணிகளை மேற்கொண் டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தனியாரிடம் மின் கொள்வனவு செய்யவேண்டிய அவசியம் ஏன்?

## தொழில்நுட்ப பொறியியலாளர் சங்கம் கேள்வி

கொழும்பு, டிசெ. 12

**நீர் மின் உற்பத்தி நிலையங் களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களில் நீர் அதிகபட்ச மட்டத்தில் இருக்கும் நிலை யிலேயே தனியார் அனல் மின் நிலையங்களிடமிருந்து மின் சாரம் கொள்வனவு செய்யப் பட்டுள்ளதாக இலங்கை மின் சார சபையின் தொழில்நுட்பப் பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

யாருடைய நலன்களுக்காக இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்பது ஆராயப்படவேண்டுமென அந்த சங்கத்தின் உப தலைவர் நந்தன உதயகுமார வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சமீபத்தில், நாங்கள் அதிக மழையைப் பெற்றோம். அதிக மழை பெய்தது, எங்கள் நீர் மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்கள் முழுமையாக நிரம்பியுள்ளன.

மேலும், நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் போதுமான நிலக்கரி கொண்டு வரப்பட்டு நிலக்கரி இருப்பு உள்ளது.

ஆனால், கடந்த வார மின் சார சபையின் தரவுகள், நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் மூன்றில் இரண்டு பங்கு இயங்குவதாகக் காட்டுகிறது.

அந்த இயந்திரங்களில் ஒன்று அதிகபட்ச திறனில் இயங்காமல் குறைந்த திறனில் இயங்குகிறது.

அதன்படி தனியார் அனல் மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் கொள்வனவு செய்யப்படுகிறது.

இந்த நேரத்தில், நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அதிக பட்ச திறனில் இயக்கக்கூடிய பின்னணி உள்ளது, ஆனால் நுரைச்சோலை அதன் அதிக பட்ச திறனில் இயக்க முடியும் என்ற சூழ்நிலையில், இந்த எண்ணெய் மின் உற்பத்தி நிலையங்களில் யாருடைய நலனுக்காக மின்சாரத்தை வாங்கினார்கள்?- என்றார். (அ)

# அர்ச்சுனா எம்.பி. குறித்து நீதிமன்றுக்கு அறிக்கை!

கொழும்பு, டிசெ. 12

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ராமநாதனுக்கு எதிராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அளித்த முறைப்பாடு தொடர்பில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தகவல் அளித்த பொலிஸ் ஊடகப் பேச் சாளர் அலுவலகம், யாழ். நீதி வான் நீதிமன்றுக்கு இந்த விசாரணைகள் தொடர்பில் முதல் தகவல் அறிக்கை ( பீ அறிக்கை) சமர்ப்பிக்கவும் யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை முற்பகல் யாழ். பொலிஸ் நிலையம் சென்ற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி, யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்துக்குள் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் அத்து மீறி நுழைந்து தன்னை திட்டி, அச்சுறுத்தியதாக முறைப்பாடளித்துள்ளார்.

வைத்தியசாலையின் ஊழியர்களை மையப்படுத்திய நிர்வாக நடவடிக்கை தொடர்பில் அர்ச்சுனா எம்.பி. தகவல்களை கோரியபோது அவற்றை வழங்க பணிப்பாளர் மறுத்துள்ள நிலையிலேயே, அவரை திட்டி இந்த அச்சுறுத்தல் நட வடிக்கை இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடு ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் டி.சி.ஏ. தனபாலவின் உத்தரவில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜயசிங்கவின் ஆலோசனைக்கு அமைய, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜயமஹவின் நேரடி கட்டுப்பாட்டில், யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவின் இந்த விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

# பெருந்தோட்ட மக்களுக்கு இனிமேல் தனி வீடு இல்லை!

கொழும்பு, டிசெ. 12

பெருந்தோட்டங்களில் தனி வீட்டுத் திட்டங்களுக்குப் பதிலாக மாடி வீட்டுத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது. பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் தேயிலை நிலங்களைப் பாதுகாத்துக் கொண்டு பெருந்தோட்ட மக்களுக்கு வீடுகளை வழங்கும் நோக்குடன் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்தார்.

குறிப்பாக வெள்ளையர்களின் ஆட்சி காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட நெடுங்குடியிருப்புகளில் இரண்டு மாடிகளைக் கொண்டு இந்த வீடுகளை அமைப்பது தொடர்பில் ஆராயப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம் பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள மக்களைத் தொடர்ந்தும் முழுமையாக பெருந்தோட்டங்களுக்குள் வைத்திருப்பதா? அல்லது அவர்களை அங்கிருந்து வெளியேற்றிக் கிராமங்களாக அவர்களைக் குடியமர்த்துவதா? என்பன தொடர்பிலும் கலந்துரையாடப்படுவதாக பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்தார். (அ)

# அரச சேவையை ஒன்லைனுக்கு மாற்றுவதே ஊழலுக்கு எதிராகப் போராட சிறந்த முறை!

கொழும்பு, டிசெ. 12

அரசாங்க சேவையை ஒன்லைன் முறைக்கு மாற்றுவதே ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்கு சிறந்த முறைமையென்று, ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் காலத் நசீர் அல்அமேரி தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் காலத் நசீர் அல்அமேரி இலங்கை பாராளுமன்ற சபாநாயகர் அசோக ரன்வலவை மரியாதையின் நிமித்தம் சந்தித்த போதே இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்து கொண்டார்.

2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள உலக அரசாங்கங்களின் மாநாட்டில் உரையாற்றுமாறு இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி அழைப்பு விடுக்கவிருப்பதாகவும் இலங்கைக்கான தூதுவர், சபாநாயகரிடம் சுட்டிக்காட்டினார். 2024ஆம் ஆண்டு நடைபெற்ற உலக அரசாங்கங்களின் மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றியிருந்ததாகவும், அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் குறித்த மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி உரையாற்றுவதை தாம் விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்க சேவையை ஒன்லைன் முறைக்கு மாற்றுவதே ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்கு சிறந்த முறைமையென்றும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. இது விடயத்தில் இலங்கையுடன் தமது நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்ள ஐக்கிய அரபு இராச்சியம் தயாராக இருப்பதாகவும் அந்நாட்டுத் தூதுவர் சுட்டிக்காட்டினார். மேலும், வெளிப்படையான மற்றும் ஈர்க்கக்கூடிய முதலீட்டு நடைமுறையை உருவாக்குவதன் முக்கியத்துவம் குறித்தும் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது (அ)

# விவசாயிகளுக்குப் பாதிப்பின்றி அரிசி இறக்குமதி செய்யப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 12

விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாத வகையிலேயே அரிசி இறக்குமதி செய்யப்பட்டு சந்தைகளுக்கு விநியோகிக்கப்படும். அரிசிக்காக தற்போது விதிக்கப்பட்டுள்ள விலைக் கட்டுப்பாடுகள் தற்காலிகமானவையாகும். எதிர்வரும் 20ஆம் திகதியின் பின்னர் இந்த பிரச்சினை நிறைவடையும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இது குறித்து தெரிவிக்கையில்- ஆரம்பத்தில் அரிசி தட்டுப்பாட்டுடனேயே பிரச்னை ஏற்பட்டது. ஜனாதிபதியும், விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரும் இது தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடினர்.

தம்மிடமுள்ள அரிசி தொகையை சந்தைகளுக்கு விநியோகிக்குமாறு நாம் பல சந்தர்ப்பங்களிலும் அரிசி ஆலை உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுத்தோம்.

எனினும் அதற்கான நடவடிக்கை முறையாக முன்னெடுக்கப்படவில்லை. அதன் அடிப்படையிலேயே ஜனாதிபதிக்கு சில தீர்மானங்களை எடுக்க வேண்டியேற்பட்டது.

அதற்கமையவே 70 000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை தீர்மானிக்கப்பட்டு, அதற்கான விலைமனு கோரப்பட்டது. 5200 மெற்றிக் தொன் அரிசி விரைவில் நாட்டை வந்தடையவுள்ளது.

இம்மாதம் 20ஆம் திகதி வரை அரிசியை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 20ஆம் திகதிக்கு பின்னர் உள்நாட்டில் அறுவடை செய்யப்படும் அரிசி சந்தைகளுக்கு விநியோகிக்கப்படும்.

விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாத வகையில், அரசாங்கம் குறிப்பிட்டளவு அரிசியை களஞ்சியப்படுத்தி வைத்துக் கொண்டு தான் எஞ்சிய தொகையை சந்தைகளுக்கு விநியோகிக்கும்.

பாவனையாளர் அதிகாரசபையும் இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளது. தற்போது பெரும்பாலான பகுதிகளுக்கு அரிசி விநியோகிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய அரிசி ஆலை உரிமையாளர்கள் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

தற்போது விதிக்கப்பட்டுள்ள இந்த கட்டுப்பாட்டு விலை தற்காலிகமானதாகும். இதனை தொடர்ச்சியாக பேணுவதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை- என்றார்.

# புத்தகத்துறைக்கு விதிக்கப்படும் பெறுமதி சேர் வரியினை நீக்குக!

கொழும்பு, டிசெ. 12

இலங்கையில் புத்தகத்துறைக்கு விதிக்கப்படும் 18 சதவீத பெறுமதி சேர் வரியை (வற் வரி) உடனடியாக நீக்குமாறும், அடுத்தாண்டு தயாரிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தின்போது இது குறித்து அரசாங்கம் தனது அவதானத்தை செலுத்த வேண்டும் என இலங்கை நூல் வெளியீட்டாளர்கள் சங்கம், இலங்கை நூல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சங்கம், அகில இலங்கை நூல் விற்பனையாளர்கள் சங்கம், இலங்கை எழுத்தாளர்கள் சங்கம் ஆகிய நான்கு சங்கங்களும் அரசாங்கத்தை கூட்டாக வலியுறுத்துகிறது.

இவ்விடயம் குறித்து தாம் தற்போது புதிதாக ஆட்சியமைத்துள்ள அரசாங்கத்திற்கு பிரேரணையொன்றை முன்மொழிந்துள்ளதாகவும் குறிப்பிட்ட இந்த சங்கங்கள், சார்க் வலய நாடுகளில் இலங்கையில் மாத்திரமே புத்தகத்துறைக்கு 18 வற் வரி அறவிடப்படுவதாகவும், ஏனைய சார்க் நாடுகளில் பூச்சய வீத வற் வரியே அறவிடப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கொழும்பிலுள்ள ஸ்ரீ சம்புத்வ ஜயந்தி மையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த இலங்கை நூல் வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமன்த இந்தீவர, பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்திருந்த போது புத்தகத் துறைக்கு 18 வீத வற் வரி விதிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவத்தவர்கள், தற்போது ஆட்சி அதிகாரத்தில் உள்ளனர். அன்று இவ்விடயத்தை எதிர்த்தவர்கள், புத்தகத்துறைக்கு விதிக்கப்படும் வற் வரியை நீக்கிக்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறப்பட்டவர்களுக்கு நீதி, பொறுப்புக்கூறல் அவசியமானது

## மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பாளர் அஸீஸ்

கல்முனை, டிசெ. 12

“மனித உரிமை மீறப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை வழங்குவதையும் பொறுப்புள்ள தரப்பினரை பொறுப்புக் கூறவைப்பதன் மூலம் எதிர்கால மீறல் களைத் தடுக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது”- இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.





ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து அவன் உயிர் வாழும் காலம் வரைக்கும் அவனுக்கான உரிமை கூடவே இருக்கிறது. மனித உரிமைகள் பிரிக்க முடியாதவை என்பதால் இலங்கை அரசியலமைப்பு மூலம் அடிப்படை உரிமையில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமை தினத்தை சிறப்பிக்கும் முகமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் நிறைவேற்று அல்லது நிருவாக நடவடிக்கை மூலம் ஏற்படும் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர் நடப்பு ஆண்டில் ஆணைக்குழுவால் செய்யப்பட்ட குறிப்பிடப்பட்ட சில பரிந்துரைகள் பற்றியும் ஆணைக்குழுவால் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 22ஃ88 இன் அடிப்படையில் அங்கவீனமுற்றோர்களுக்கு தொழில் வழங்குதல் பற்றிய வழிகாட்டல்கள் பற்றியும் கருத்துத் தெரிவித்ததுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஆராய்ந்ததற்கமைய பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் உரிமை மீறப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை வழங்கும் நோக்காகக் கொண்டுள்ளது என்பதையும் பொறுப்புள்ள தரப்பினரை பொறுப்புக் கூற வைப்பதன் மூலம் மனித உரிமைகளை மதிக்கும் சமூகத்தை வளர்ப்பதன் மூலமும் எதிர் காலத்தில் உரிமை மீறல்களை தடுக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பாசில் கலந்து கொண்டார்.

அத்துடன் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டல்கள், அறிக்கைகள் விருந்தினர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டன. (எ)

# வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டும் மனித உரிமை ஆணைக்குழுவில் மனு

## நீதிக்கான போராட்டம் தொடரும் - அதாவுல்லா



கல்முனை, டிசெ. 12

திகாமடுல்ல மாவட்டத்தில் வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டும் என்று கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸிடம் முன்னாள் அமைச்சர் ஏ. எல். எம். அதாவுல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியில் போட்டியிட்டு தோல்வியடைந்த தேசிய காங்கிரஸின் தலைவர் அதாவுல்லா மனு ஒன்றின் ஊடாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.


குறித்த மனுவில் திகாமடுல்ல மாவட்டத்தின் தேர்தல் முடிவுகள் மீள எண்ணப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட பல தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை உரிய பதில்கள் கிடைக்கவில்லை. எனவே, எனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

மேலும், நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர்களின் உரிமைகள் திட்டமிடப்பட்ட வகையில் மறுக்கப்பட்டுள்ளன. நாம் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட முடிவுகளை ஏற்றுக் கொள்ளவில்லை. இங்கு புதிய ஜனநாயக முன்னணி 88 வாக்குகளால் தோற்றதாக அறிவிக்கப்பட்டது. நாம் வாக்குகள் எண்ணப்பட வேண்டும் என்று கொழும்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். நீதிக்கான எமது போராட்டம் தொடரும்- என்றார்.

இதேவேளை, நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் அடங்கிய மனுவொன்றை அதாவுல்லா கையளித்ததாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் உறுதிப்படுத்தினார்.(எ)

## உணவகங்களில் திடீர் சோதனை

# பாவனைக்கு உதவாத உணவுகள் கைப்பற்றப்பட்டு உடனே அழிப்பு



கல்முனை, டிசெ. 12

சாய்ந்தமருதில் உள்ள உணவகங்களில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது,பாவனைக்கு உதவாத உணவுகள் கைப்பற்றப்பட்டு உடனடியாக அழிக்கப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையிலான குழுவினர் இவ்வாறு சோதனையில் ஈடுபட்டனர்.

உணவகங்கள், வெதுப்பகங்கள், மரக்கறி, மீன் விற்பனை நிலையங்கள், பலசரக்கு கடைகள், இனிப்பு கடைகள் என்பன சோதனைக்கு உட்படுத்தப் பட்டன.

இதன்போது, பழுதடைந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் சில நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர் வரும் காலங்களில் உணவு சுகாதாரம் மீதான கண்காணிப்பு தொடரும் என்பதுடன் இறுக்கமான சட்ட நடைமுறைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் சுகாதார பிரிவினர் எச்சரித்தனர்.

இவ்வாறான சோதனை நடவடிக்கைகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் காத்தான்குடியில் விசேட ஒன்று கூடல்

மட்டக்களப்பு, டிசெ. 12

மட்டக்களப்பு, காத்தான் குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விசேட ஒன்று கூடல் நடைபெற்றது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது களப் பணியாற்றிய நிறுவனங்கள், அனைத்து பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ தொண்டர்களை ஒருங்கிணைக்கும் வகையில் இந்த ஒன்று கூடல் நடைபெற்றது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் - முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் தலைவர் தௌபீக் தலைமையில் நடைபெற்ற இந்த ஒன்று கூடலில், அனர்த்த முன்னாயத்தம் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் இதற்காக காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தால் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

“இஸ்லாமிய பார்வையில் அனர்த்தங்கள்” என்ற தலைப்பில் அஷ்ஷெய்க் மன்சூர் மதனி உரையாற்றியதுடன் சம்மேளனத்தின் வேலைத் திட்டங்கள் தொடர்பில் ஓய்வு பெற்ற அதிபர் சத்தார் உரையாற்றினார்.

சம்மேளன செயலாளர் மௌலவி இல்ஹாம் உட்பட சம்மேளன பிரதிநிதிகள் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# கல்வி அமைச்சின் செயலாளராக குணநாதன்

திருகோணமலை, டிசெ. 12

திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலாளராக கடமையாற்றிய இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த கு. குணநாதன்,

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்ன சேகரவால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றவாளிகள் யாரும் தப்ப முடியாது!

## சிரியா கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை

டமாஸ்கஸ், டிசெ. 12

சிரியா மக்களுக்கு எதிராக சித்திரவதை மற்றும் போர்க் குற்றங்களில் ஈடுபட்ட முன்னாள் மூத்த அரசாங்க அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிரியா கிளர்ச்சித் தலைவர் அகமது அல் ஷாரா உறுதிபடத் தெரிவித்துள்ளார். "சிரியா மக்களை சித்திரவதை செய்வதில் ஈடுபட்ட குற்றவாளிகள், கொலைகாரர்கள், பாதுகாப்பு மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோரை அதற்கு பொறுப்பேற்க வைக்க நாங்கள் தயங்க மாட்டோம். போர்க் குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் குறித்த தகவல்களை வழங்குவோருக்கு வெகுமதி



யளிக்கப்படும்" என்று அகமது அல் ஷாரா அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (எ)

# இரசாயன ஆயுதங்கள், ஏவுகணைகள் கிளர்ச்சியாளர்களிடம் கிடைக்கக்கூடாது

## சிரியாவுக்குள் ஆழமாக ஊடுருவி இஸ்ரேல் தாக்குதல்

டமாஸ்கஸ், டிசெ. 12

**சிரியாவில் உள்ள இரசாயன ஆயுதங்கள், ஏவுகணைகள் உள்ளிட்ட இராணுவத் தளபாடங்கள் கிளர்ச்சியாளர்களிடம் கிடைத்தால் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கருதி ஆழமாக ஊடுருவி தாக்குதல் நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.**

சிரியாவின் பெரும் பகுதிகளை கிளர்ச்சிக் குழுக்கள் கைப்பற்றியதையடுத்து ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் அரசு கவிழ்ந்தது. ஜனாதிபதி ஆசாத், நாட்டைவிட்டு தப்பிச் சென்று ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார்.

இதையடுத்து சிரியாவில் அரசியல் நெருக்கடி உருவாகியுள்ளது. ஜனாதிபதி நாட்டைவிட்டுச் சென்றபோதும், பிரதமர் தொடர்ந்து பதவியில் நீடிக்கிறார். சுமுகமான முறையில் அதிகார மாற்றம் தொடர்பில் பிரதமரை கிளர்ச்சியாளர்கள் குழு சந்தித்து ஆலோசனை நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையே இஸ்ரேல் தனது பாதுகாப்புக்காக சிரியா முழுவதும் கடுமையான வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

இஸ்ரேல் படைகள் நாட்டுக்குள் தொடர்ந்து முன்னேறி, தலைநகரில் இருந்து 25 கிலோமீற்றர் தொலைவு வரை சென்றதாக சிரியாவின் எதிர்க்கட்சி போர் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. ஆனால், தலைநகர் நோக்கி படைகள் முன்னேறுவதாக வெளியான தகவலை இஸ்ரேல் மறுத்துள்ளது.

நேற்று இரவு முழுவதும் தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கடுமையான வான்வழித் தாக்குதல் நடத்தும் சத்தம் கேட்டதாக செய்தி வெளியானது. அழிக்கப்பட்ட ஏவுகணை லோஞ்சர்கள், ஹெலிகொப்டர்கள் மற்றும் போர் விமானங்கள் தொடர்பான படங்கள் இணையத்தளத்தில் வெளியாகின.

ஆனால், சிரியா தலைநகரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கிளர்ச்சியாளர்கள், இதுபற்றி எந்தவொரு தகவலும் தெரிவிக்கவில்லை.

முன்னதாக, சிரியாவுக்குள் சுமார் 400 சதுர கிலோமீற்றர் பாதுகாப்பு மண்டலத்தை இஸ்ரேல் கைப்பற்றியது. ஆசாத் அரசு கவிழ்ந்த பின்னர் தாக்குதல்களை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (எ)

# சிரியாவில் அரசாங்கம் இன்னும் செயல்படுகிறது

## பிரதமர் முகமது காஜி ஜலாலி



டமாஸ்கஸ், டிசெ. 12

சிரியாவில் இப்போதும் அரசாங்கம் செயல்படுகிறது என்று பிரதமர் முகமது காஜி ஜலாலி தெரிவித்தார்.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்தின் படைகளுக்கு எதிராக நீண்ட காலமாக ஆயுத மோதலில் ஈடுபட்டு வந்த கிளர்ச்சிக் குழுவினர் நாட்டின் பெரும்பகுதிகளை கைப்பற்றியுள்ளனர். இதையடுத்து 50 ஆண்டு கால ஆசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

ஆசாத் நாட்டை விட்டுச் சென்ற பிறகு அவரது ஆட்சியில் முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் மற்றும் பெரும்பாலான உயர் அதிகாரிகளும் வெளியேறிவிட்டனர். ஆனால், பிரதமர் முகமது காஜி ஜலாலி தொடர்ந்து பதவியில் நீடிக்கிறார். நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும், புதிய தலைமையை கொண்டு வருவதற்காகவும் கிளர்ச்சிக் குழுவினருக்கு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறார்.

சிரியாவில் அரசாங்கம் இன்னும் செயல்பட்டு வருவதாகவும், இயல்பு நிலையை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் பிரதமர் முகமது காஜி ஜலாலி கூறியுள்ளார்.

"அதிகார மாற்றம் சுமுகமாக இருக்கும் வகையில் பணியாற்றி வருகிறோம். பாதுகாப்பு நிலைமை முன்னேற்றம் அடைந்துள்ளது. கிளர்ச்சியாளர்களுடன் அரசாங்கம் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. கிளர்ச்சிக் குழு தலைவர் அபு முகமது அல் - கோலானி என்று அழைக்கப்படும் அஹ்மத் அல் - ஷாராவை சந்திக்கத் தயாராக இருக்கிறேன்" என்றும் பிரதமர் கூறினார். (எ)

# சனத்தொகையை அதிகரிக்க ஜப்பான் அரசு புதிய திட்டம்

## வாரத்தில் 4 நாட்களே இனி வேலை

ரோக்கியோ, டிசெ. 12

ஜப்பானில் சனத்தொகையை அதிகரிக்க அந்த நாட்டு அரசு தைரியமான முடிவை எடுத்துள்ளது. இதன்படி,

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து வாரத்தில் 4 நாட்கள் வேலைத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

ஜப்பானில் கடந்த ஆண்டில் வரலாறு காணாத அளவில் பிறப்பு விகிதம் சரிவடைந்தது. 2022ஆம் ஆண்டு பதிவானதைக் காட்டிலும் கடந்த ஆண்டு பிறப்பு விகிதம் 5. 6 சதவீதம் குறைந்து 7 இலட்சத்து 27,277 ஆகப் பதிவானது. ஆகவே, ஜப்பானில் பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதற்காக வாரத்தில் 4 நாட்கள் மட்டுமே வேலை செய்யும் நடைமுறையை ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் உள்ள அரசு அலுவலகங்களில் கொண்டுவரப்பட உள்ளதாக ரோக்கியோ ஆளுநர் யூரிகோ கொய்கே அறிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு (2025) ஏப்ரல் முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதனால், ஊழியர்கள் குடும்பத்துடன் அதிக நேரம் செலவிடுவார்கள் என்றும் அவர்கள் உடல் மற்றும் மனதளவில் ஆரோக்கியமாக இருப்பார்கள் என்றும் ஆளுநர் யூரிகோ கொய்கே நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# மைக்ரோசொப்ட் சேவை முடங்கியது

வாஷிங்டன், டிசெ. 12

உலகளவில் மைக்ரோசொப்ட் சேவை முடங்கியுள்ளது. இந்த நிலையில், சேவையை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் இயங்குதளம் கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி சர்வதேச அளவில் முடங்கியது. மென்பொருள் தரவேற்றத்தில் ஏற்பட்ட மாறுதல்தான் கோளாறு ஏற்படுவதற்கு காரணம் எனத் தெரிய வந்தது.

இந்த நிலையில் நேற்று நள்ளிரவில் திடீரென உலகளவில் சேவைகள் முடங்கியதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது. சேவை பாதித்துள்ள நிலையில் பயனாளர்களின் கோப்புகள் பாதுகாப்பாகவுள்ளது.

மைக்ரோசொப்ட் சேவை முடங்கியதால் அவுட்லுக், எக்செல், ஒன் ட்ரைவ் போன்ற செயலிகளை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மைக்ரோசொப்ட் சேவையை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (எ)

# "இந்தியா - ரஷ்யா நட்புறவு மலையை விட உயர்ந்தது"



மொஸ்கோ, டிசெ. 12

இந்தியா - ரஷ்யா இடையேயான நட்புறவு மிக உயர்ந்த மலையை விட உயர்ந்தது மற்றும் ஆழமான கடலை விட ஆழமானது என்று இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

3 நாட்கள் அரசு முறை பயணமாக ராஜ்நாத்சிங், ரஷ்யா சென்றுள்ளார்.

அங்கு அவர் தலைநகர் மொஸ்கோவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தியா - ரஷ்யா இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்புக்ன 21ஆவது கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்துக்கு பின் ராஜ்நாத் சிங், ரஷ்ய ஜனாதிபதி புடினை நேரில் சந்தித்து பேசினார். அப்போது, அவர் புடினுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அன்பான வாழ்த்துகளை தெரிவித்தார். தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான இராணுவ ஒத்துழைப்பு உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் தீவிரமாக ஆலோசனை நடத்தினர்.

இரு தரப்பு பேச்சுகளின் போது ராஜ்நாத்சிங் "நமது நாடுகளுக்கு இடையேயான நட்புறவு மிக உயர்ந்த மலையை விட உயர்ந்தது மற்றும் ஆழமான கடலை விட ஆழமானது. இந்தியா தனது ரஷ்ய நண்பர்களுக்கு எப்போதும் துணை நிற்கும். எதிர்காலத்திலும் இது தொடரும்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி

## போராடி தோற்றது பாகிஸ்தான்

டர்பன், டிசெ. 12

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் ரி - 20 போட்டியில் 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி -20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ரி - 20 தொடர் நடைபெறுகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ரி - 20 போட்டி டர்பனில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழந்து 183 ஓட்டங்கள் எடுத்தது. தென்னாபிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக டேவிட் மில்லர் 40 பந்துகளில் 82 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் ஷாகின் ஷா அப்ரிடி, அப்ரார் அகமது தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

தொடர்ந்து 184 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய பாகிஸ்தான் 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழந்து 172 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில்




தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது. பாகிஸ்தான் சார்பில் ரிஸ்வான் 74 ஓட்டங்கள் எடுத்தார்.

தென்னாபிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக ஜோர்ஜ் லிண்டே 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இரு அணிகளுக் கும் இடையிலான 2ஆவது ரி - 20 போட்டி நாளை 13ஆம் திகதி சென்சூரியனில் நடைபெறுகிறது.(எ)

## சம்பியனானது ஜப்பான்



புதுடில்லி, டிசெ. 12

இறுதிப் போட்டியில் கொரியாவை வீழ்த்தி இரண் டாவது முறையாக ஆசிய கைப்பந்து சம்பியனானது ஜப்பான்.

மகளிருக்கான 20ஆவது ஆசிய கைப்பந்து சம்பியன் ஷிப் போட்டிகள் இந்தியாவின் தலைநகர் புதுடில்லி யில் நடைபெற்று வந்தது. இதன் இறுதிப் போட்டியில் 16 முறை சம்பியன் பட்டம் வென்ற கொரியாவுடன், ஜப்பான் பலப்பரீட்சை நடத்தியது. பரபரப்பாக நடை பெற்ற இந்த ஆட்டத்தில் ஜப்பான் 25 24 என்ற கணக் கில் கொரியாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது. ஜப்பான் பட்டம் வெல்வது இது 2ஆவது முறையாகும். அந்த அணி 2004ஆம் ஆண்டும் கிண்ணம் வென்றிருந்தது.

இந்தத் தொடரில் இந்திய அணி 6ஆவது இடம் பிடித்தது. 5ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் இந்திய அணி 30 - 41 என்ற கணக்கில் சீனாவிடம் தோல்விய டைந்தது. கஜகஸ்தான் 28 - 22 என்ற கணக்கில் ஈரான் அணியை வீழ்த்தி 3ஆவது இடம் பிடித்தது. (எ)

## டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் முதல் இடம்பிடித்தார் ஹாரி புரூக்



டுபாய், டிசெ. 12

டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசை பட்டியலில் இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக் முதல் இடத் துக்கு முன்னேறியுள்ளார். ஜோ ரூட் 2ஆவது இடத்தில் உள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி) டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதன்படி, 898 புள்ளிகளுடன் ஹாரி புரூக் முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார். இங்கிலாந்து அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் ஜோ ரூட் (897 புள்ளி) ஒரு இடம் சரிந்து 2ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

இந்த பட்டியலில் நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன் (812 புள்ளி) 3ஆவது இடத்திலும், இந்தியாவின் யஷஸ்வி ஜெய்ஸ்வால் (811 புள்ளி) 4ஆவது இடத்திலும் உள்ள னர். அவுஸ்திரேலியாவின் ட்ராவிஸ் ஹெட் (781 புள்ளி) 6 இடங்கள் முன்னேறி 5ஆவது இடத்துக்கு வந்துள் ளார். ரிஷப் பண்ட் (724 புள்ளி) 9ஆவது இடத்திலும், சுப்மன் கில் (672 புள்ளி) 17ஆவது இடத்திலும், விராட் கோலி (661 புள்ளி) 20ஆவது இடத்திலும் உள்ளனர்.

## பும்ரா தொடர்ந்து முதலிடம்



டெஸ்ட் பந்துவீச்சாளர்கள் தரவரிசை பட்டியலில் இந்தியாவின் ஜஸ்ப்ரித் பும்ரா (890 புள்ளி) முதல் இடத் திலும், தென்னாபிரிக்காவின் ககிசோ ரபாடா (856 புள்ளி) 2ஆவது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் ஜோஷ் ஹேசில்வுட் (851 புள்ளி) 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

டெஸ்ட் சகல துறை வீரர்கள் தரவரிசை பட்டியலில் இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா (415 புள்ளி) முதல் இடத்தில் உள்ளார். பங்களாதேஷின் மெஹதி ஹசன் மிராஸ் (284 புள்ளி) 2 இடங்கள் முன்னேறி 2ஆவது இடத்துக்கு வந்துள்ளார். இந்தியாவின் ரவிச்சந்திரன் அஸ்வின் (283 புள்ளி) 3ஆவது இடத்தில் உள்ளார் என்று ஐ. சி. சி. அறிவித்துள்ளது. (எ)

## ஒருநாள் தொடர் மே. இ. தீவுகள் வசம் மீண்டும் சொதப்பியது பங்களாதேஷ்

செயின்ட் கிட்ஸ், டிசெ. 12

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவு களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒரு நாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டெஸ்ட் தொடர் 1 - 1 என சமனில் முடிந்தது. தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதல் ஆட்டத் தில் மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என முன்னிலையில் இருந்தது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கு இந்திய தீவுகள் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 45. 5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 227 ஓட்டங்கள் எடுத்தது.

பங்களாதேஷ் தரப்பில் அதிகபட்சமாக மஹ்மதுல்லா 62 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கு இந்திய தீவுகள் அணி தரப்பில் ஜெய்டன் சீல்ஸ் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 228 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 36. 5 ஓவர்களில் 3 விக்கெட்கள் மட்டும்



இழந்து 230 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக பிரண்டன் கிங் 82 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 - 0 என்ற கணக்கில் மேற்கு இந்திய தீவுகள் அணி கைப்பற்றியது. இரு அணிகளுக்கும் இடை யிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி இன்று நடைபெறவுள்ளது. ஒருநாள் தொடர் நிறைவடைந்த தும் ரி - 20 போட்டிகள் நடைபெறவுள்ளன. (எ)

## பொக்ஸிங் டே டெஸ்ட் போட்டி பற்றுச்சீட்டுகள் விற்று தீர்ந்தன

மெல்பேர்ண், டிசெ. 12

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதும் பொக்ஸிங் டே டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான பற்றுச்சீட்டுகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்துள்ளதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையே 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பெர்த்தில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்திய அணி 295 ஓட்டங்கள் வித் தியாசத்தில் வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து அடி லெய்டில் நடைபெற்ற பகலிரவு டெஸ்ட் போட்டி யில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்கள் வித்தியாசத் தில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது.

இதனால் டெஸ்ட் தொடர் 1 - 1 என சமநிலையில் உள்ளது. இந்த நிலையில் 3ஆவது டெஸ்ட் நாளை மறு தினம் 14ஆம் திகதி பிரிஸ்பன் நகரில் தொடங்குகிறது. இதைத் தொடர்ந்து 4ஆவது டெஸ்ட் போட்டி மெல்பேர்ண் மைதானத்தில் 26ஆம் திகதி தொடங்குகிறது. பொக்ஸ [illegible] இந்த ஆட்டத்துக்கான முதல் நாள் நுழைவுச்சீட்டுகள் விற்றுத் தீர்ந்துள்ளதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தனது எக்ஸ் வலைத்தளப் பதிவில் தெரிவித்துள்ளது.

அதில் "பொக்ஸிங் டே டெஸ்டின் முதல் நாளுக்கான அனைத்து பொது பற்றுச்சீட்டுகளும் விற்கப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் அல்லாதவர்களுக்கு தங்கள் இடங்களைப் பெறுவதற்கான குறைந்த எண்ணிக்கையிலான பொது பற்றுச்சீட்டுகள் 24ஆம் திகதி வெளியிட சாத்தியக்கூறு கள் உள்ளன"எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிலெய்டில் நடைபெற்ற பகலிரவு டெஸ்ட் போட் டியை காண்பதற்கு ஒட்டுமொத்தமாக 3 நாட்களில் 1. 35 இலட்சம் பார்வையாளர்கள் வந்திருந்தனர். இது சாத னையாக அமைந்தது. இதற்கு முன்னர் 2014 - 15ஆம் ஆண்டு 5 நாட்கள் முழுமையாக நடைபெற்ற டெஸ்ட் போட்டியை 1. 13 இலட்சம் பேர் பார்வையிட்டதே சாதனையாக இருந்தது. பொக்ஸிங் டே டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ள மெல்பேர்ண் மைதானத்தில் 95 ஆயிரம் ரசிகர்கள் அமர்ந்து போட்டியை கண்டுக ளிக்கலாம். இதுதவிர 5 ஆயிரம் பேர் நின்று கொண்டும் போட்டியை காணலாம் என்பது குறிப்பிடத்தக்கது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹிந்தவின்...

அதிபர் (மனித வள முகாமையாளர்) அறிவித்துள்ளதாக சட்டத்தரணி ஊடக வியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த 116 பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அந்தப் பாதுகாப்புப் பிரிவில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்காக மொத்தமாக 60 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு, அதிகபட்சமாக நாளொன்றுக்கு 20 பேர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## இந்தியாவின்...

என்றும், தற்போது வழங்கப்படும் இந்தப் பயிற்சிகளை உத்தியோகத்தர்கள் உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார். மனித வளத்தை மேம்படுத்தாவிட்டால் மக்களுக்கான சேவைகளை சிறப்பாக வழங்க முடியாது என ஆளுநர் குறிப்பிட்டார். ஐரெக் திட்டத்தின் கீழ் இந்தியாவிலுள்ள தரமான கல்வி நிலையங்களிலேயே பயிற்சிகள் வழங்கப்படுகின்றன எனவும் அந்தப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக சிறந்த சேவைகளை எமது மக்களுக்கு வழங்கக் கூடியதாகவும் இருக்கும் என்றும் ஆளுநர் தனது உரையில் தெரிவித்தார்.

"இந்தியா எமக்கு பல வழிகளிலும் உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கிவருகின்றது. அது தொடர வேண்டும். குறிப்பாக வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் விவசாயம் முக்கியமானது. விவசாயத்துறை சார்ந்த பயிற்சிகளை வழங்குவதற்கு முன்வர வேண்டும்" என ஆளுநர் தனது உரையில் கோரிக்கை முன்வைத்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கைக்கு இந்தியத் துணைத்தூதரகத்தின் சார்பில் சாதகமான பதில் வழங்கப்பட்டது. (அ)

## சிறுவர்களின்...

உத்தரவிட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் முன்வைத்த சமர்ப்பணங்களைக் கருத்திற்கொண்டு கொழும்பு மேலதிக நீதவான் கெமிந்த பெரேரா இந்த உத்தரவை வழங்கினார்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட "நெக்மெக்" என்ற இணைய நிறுவனம் உலகின் எட்டு நாடுகளை தங்களது உறுப்பினர்களாக இணைத்துள்ளது என அந்த பணியகம் மன்றுரைத்துள்ளது.

குறித்த நிறுவனத்தில் உறுப்புரிமை பெற்ற நாடுகளில் சிறுவர்கள் தொடர்பான ஆபாச காணொளிகள் மற்றும் படங்கள் இணையத்தில் வெளியிடப்படுவது குறித்து அந்த நிறுவனம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறான விசாரணைகளில், இலங்கைச் சிறுவர்களின் ஆபாச காணொளிகள் மற்றும் படங்கள் கணினியொன்றின் ஊடாகவும் வெளியிடப்பட்டுள்ளமையை அந்த நிறுவனம் கண்டறிந்து அது குறித்து இலங்கைக்கு அறிவித்ததாக அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதுபோன்ற பல முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றபோதிலும் இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் எவரும் இனங்காணப்படவில்லை எனப் பணியகம் நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்துள்ளது.

பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் நீதிமன்றில் முன்வைத்த சமர்ப்பணங்களைப் பரிசீலித்த நீதவான், குறித்த விடயம் தொடர்பில் உடனடி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். (அ)

## யாழில்...

ஆண்டில், நாடு முழுவதும் 9,000 இற்கும் மேற்பட்ட எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதோடு, அவர்களில் கிட்டத்தட்ட 200 பேர் இறந்துள்ளனர்.

கடந்த வருடத்தை விட இந்த வருட காலப்பகுதியில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள், நெல் வயல் மற்றும் நீர் தொடர்பான பிற கடமைகளில் அடிக்கடி ஈடுபடுபவர்கள், சுரங்கம் தொடர்பான பணிகளில் ஈடுபடுபவர்கள் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளனர். வாந்தி, தலைவலி, உடல் பலவீனம், சிறுநீரில் இரத்தம், சிறுநீரின் வெளியீடு குறைதல் ஆகியவற்றுடன் அதிக காய்ச்சல், கடுமையான தசைவலி, கண்கள் சிவத்தல் போன்றன எலிக் காய்ச்சலின் அறிகுறிகள் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இம்மாத...

அவர்களையும் இம்மாத இறுதிக்குள் மீள்குடியேற்றி, அந்த நலன்புரி நிலையமும் மூடப்படவுள்ளது என்றும் பிரதீபன் குறிப்பிட்டார்.

பிரிட்டன் தூதரகத்தின் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைக்கான முதன்மைச் செயலாளர் ஹென்றி டொனாடி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பிரதீபனை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார்.

ஒரு நலன்புரி நிலையத்தில் இரண்டு குடும்பங்கள் மாத்திரமே தங்கியிருப்பதாகவும் அவர்களுக்கும் காணிக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இம்மாத இறுதிக்குள் அந்த நலன்புரி நிலையமும் மூடப்படவுள்ளதாகவும் பதில் அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது. (எ- 05)

## இந்திய...

முயற்சிக்கப்படுகின்றதா? என்ற சந்தேகத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை அண்மையில் சந்தித்த கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இந்திய இழுவைப் படகுகளுக்கு அனுமதி வழங்கும் முன்னைய அரசாங்கத்தின் சிந்தனையை தற்போதைய அரசாங்கம் கைவிட்டு விட்டதாக கூறியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள டக்ளஸ் தேவானந்தா, "எமது கடல் வளங்களை அழிக்கின்ற இழுவை மடி தொழில் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்பதே 90 ஆம் ஆண்டுகளில் இருந்து எனது உறுதியான நிலைப்பாடாக இருந்து வருகிறது. கடற்றொழில் அமைச்சராக நான் செயல்பட்ட காலப்பகுதியில் கடற்றொழில் அமைச்சின் நிலைப்பாடும் அவ்வாறே இருந்தது.

இந்திய இழுவைமடி படகுகள் இலங்கையின் வடக்கு கடல் பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கும் எந்தவகையான திட்டமும் கடந்த காலங்களில் என்னிடம் இருந்திருக்கவில்லை.

உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் வெளியிடப்படுவதானது, ஆழமான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் கடற்றொழிலாளர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்தபோதும், இந்திய மீனவர்கள் விவகாரம் தொடர்பில் எனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருந்தேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-05)

## மர்மக் காய்ச்சலால் பாதிப்புற்ற

வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளநிலைமைக்கு பின்னர் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒரு வகையான காய்ச்சல் பரவி வருகின்றது.

இந்தக் காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் நான்கு இறப்புக்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரண்டு இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த இறப்புக்களில் இரண்டு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இரண்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஒன்று கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஏற்பட்டுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இறந்த ஒருவர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதினராக காணப்படுகின்றனர்.

இறந்தவர்கள் எல்லா இறப்புக்களும் சுவாசத்தொகுதி பாதிப்பினாலேயே ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இந்த காய்ச்சலுடன் நவம்பர் மாதத்தில் பன்னிரெண்டு நோயாளர்களும் டிசெம்பர் மாதத்தில் இருபத்தொரு நோயாளர்களுமாக மொத்தமாக இதுவரை 33 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இந்தக் காய்ச்சலுடன் 20 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தக் காய்ச்சல் எலிக் காய்ச்சலாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. இந்தக் காய்ச்சல் எந்த வகையானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கும் குருதி மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எலிக்காய்ச்சல் மழை வெள்ளத்தில் எலி, ஆடு, மாடு போன்ற விலங்குகளின் எச்சங்கள் கலப்பதன் மூலம் இந்நோய்க் கிருமிகள் வெள்ள நீரில் கலக்கின்றன. பொதுமக்கள் இந்த வெள்ளநீருடன் தொடுகை ஏற்படும்போது அவர்களது தோலிலுள்ள சிறு காயங்கள், புண்கள் மூலம் உடலின் குருதிச் சுற்றோட்டத் தொகுதியை சென்றடைந்து எலிக்காய்ச்சல் நோய் உண்டாகிறது. மேலும் இக்கிருமிகள் கலந்த அசுத்தமான நீரைப் பருகுவதனாலும் எலிக்காய்ச்சல் நோய் ஏற்படலாம்.

இக்காய்ச்சலிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு பின்வரும் விடயங்களை பின்பற்றுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றோம்.

1) காய்ச்சல் ஏற்பட்டால் ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகிலுள்ள அரசாங்க வைத்திய சாலையை நாடவும். காய்ச்சல் ஏற்பட்டு தாமதமாக அரச வைத்தியசாலைகளுக்கு வருகை தந்தமையினாலேயே பெரும்பாலான இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

2) தகுந்த மருத்துவ ஆலோசனையின்றி நேரடியாக மருந்தகங்களில் மருந்துகள் வாங்கிப் பாவிப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

3) தற்போதைய காலப்பகுதியில் அவசியமின்றி வெள்ள நீரில் இறங்குவதை தவிர்த்துக்கொள்ளவும்.

4) வயல்கள் சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் கால்களுக்கு பாதுகாப்பு அங்கிகளை அணிந்துகொள்ள வேண்டும். கால்களில் காயங்கள் அல்லது புண்கள் உள்ளவர்கள் வெள்ள நீரில் இறங்குவதை தவிர்த்துக்கொள்ளவும்.

5) கட்டாயமாக கொதித்து ஆறிய நீரைப் பருகவும்.

6) வெள்ள நீரினால் அசுத்தமான கிணறுகளை இறைத்து குளோரின் இடவும்.

7) தற்போதைய காலப்பகுதியில் வெள்ள நீரால் நிரம்பியுள்ள குளங்களில் குளிப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

8) தற்போது நோய் பரவிவரும் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் வயல்கள், சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் தமக்குரிய தடுப்பு மருந்துகளை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே பொதுமக்கள் மேற்படி ஆலோசனைகளை பின்பற்றி இந்த நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## மர்மக்...

மாவட்டத்தில் ஒருவருமாக இது வரை உயிரிழந்துள்ள நிலையில் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத் துறையினர் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன், ஆளுநர் தொலைபேசியில் நேற்று புதன்கிழமை மாலை உரையாடினார்.

உயிரிழப்புக்கான காரணம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் மாதிரிகள் கொழும்பு மற்றும் கண்டிக்கு அனுப்பப்பட்டுள்ளன என் றும் குறிப்பிட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், எலிக்காய்ச்சலாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். அத்துடன் வேறு வைரஸ் தொற்றுக்களாகவும் இருக்கக் கூடும் என்ற நியாயமான சந்தேகங்கள் இருப்பதாகவும் அது தொடர்பான விவரங்களையும் ஆளுநரிடம் குறிப்பிட்ட அவர் இது தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பிலிருந்து இரண்டு குழுக்கள் நாளையும், நாளை மறுதினமும் வருகை தரவுள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்த காய்ச்சலுக்குரிய தடுப்பு மருந்துகள் வேறு மாவட்டங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டு விநியோக நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும், அதேபோன்று ஒரு தொகுதி மருந்துக்கு கொழும்பு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள தகவலும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். (அ)

## மழையால்...

ரி. என். சூரியராஜா தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜே/14 கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இதேவேளை, சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜே/165 கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது என தெரிவித்தார். (எ- 05)

## காய்ச்சல்...

காய்சல் காரணமாக கடந்த சில தினங்களில் மட்டும் நான்கு பேர் மரணமடைந்துள்ள நிலையில் இந்த உயிரிழப்பும் பதிவாகியுள்ளது.

இதனால் யாழ். மாவட்ட மக்கள் மத்தியில் இந்த மர்மக் காய்ச்சல் குறித்து அச்ச நிலை தோன்றியுள்ளது.

கடந்த மூன்று தினங்கள் காய்ச்சல் ஏற்பட்டதை தொடர்ந்து பனடோல் உட்கொண்டதாகவும காய்ச்சல் நிற்காததை அடுத்து கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தபோது அவர் மயக்கமுற்றதாகவும், உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் கூறப்பட்டது. (அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## புலமைப் பரிசில் பரீட்சை; விசாரணை ஒத்திவைப்பு!

கொழும்பு, டிசெ. 12

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மூன்று கேள்விகள் கசிந்துள்ளதாக எழுந்த குற்றச்சாட்டை அடுத்து, பரீட்சையை மீண்டும் நடத்த உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை உயர் நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்துள்ளது.

இந்த மனுக்கள் நேற்று உயர் நீதிமன்ற நீதியரசர்களான எஸ்.துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது, இவ் விடயத்தில் தீர்ப்பளிக்கத் தேவையான மூன்று பேர் கொண்ட உயர் நீதியரசர்கள் குழாம் அமைக்கப்படாதமையினால் விசாரணை டிசெம்பர் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நடந்து முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் பகுதியில் மூன்று கேள்விகள் முன்னதாகவே வெளியிடப்பட்டதாக கூறப்படும் சம்பவம் காரணமாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## சட்டவிரோதமாக கடல் வழியாக இலங்கை வர முயன்ற 4 பேர் கைது!

சென்னை, டிசெ. 12

இந்தியாவில் இருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் கடல் வழியாக வர முயன்ற நால்வர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இராமேஸ்வரத்தில் கைது செய்யப்பட்டனர்.

யாழ்.மாவட்டத்தின் கட்டப்பிராய், கோப்பாய் பகுதிகளில் இருந்து தமிழகத்துக்குப் படகு மூலம் சட்டவிரோதமாகச் சென்று முகாம்களில் தங்கியிருந்தோரே தாயகம் திரும்பும் நோக்கில் படகில் பயணிக்க முயன்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரில் 3 ஆண்களும், ஒரு பெண்ணும் அடங்குகின்றனர்.

நால்வரும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு திருச்சி சிறப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## அதானி குழும மின் உற்பத்தி; விவரங்கள் அமைச்சரவைக்கு

கொழும்பு, டிசெ. 12

இலங்கையில் அதானி குழுமத்தின் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்கள் தொடர்பில் அமைச்சரவையில் விவரங்களை சமர்ப்பிக்கவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த குழு காற்றாலை மின் திட்டங்களை பல துறைகள் மூலம் ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்கியுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்னார் மற்றும் பூநகரியில் முன்மொழியப்பட்டுள்ள காற்றாலை மின் திட்டங்கள் மூலம் மொத்தம் 484 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டங்களில் அதானி குழுமம் ஏற்கனவே சில முதலீடுகளை செய்துள்ளது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், குழுவின் அறிக்கை மற்றும் பரிந்துரைகளை ஆய்வு செய்த பின்னர், இது குறித்து அமைச்சரவை முடிவெடுக்கும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## அமெரிக்க தூதுவருடன் ரவூப் ஹக்கீம் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 12

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் சவூப் ஹக்கீமுக்கும், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையிலான சந்திப்பொன்று கண்டியில் இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கின் உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்திலேயே இந்த விடயம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது சிறுபான்மை மக்களின் உரிமைகள், பொருளாதார மீள் கட்டமைப்பு நடவடிக்கை வடக்கு கிழக்கு மாகாணங்களின் அரசியல் நிலப்பரப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன. (அ)

# தங்கள் மீதான நம்பிக்கையை அரசு கட்டியெழுப்பவேண்டும்!

### ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ



கொழும்பு, டிசெ. 12

**நாட்டில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதும், சகலரும் அதற்கு மதிப்பளிப்பதை உறுதிப்படுத்துவதும் அத்தனை இலகுவான விடயமல்ல எனவும் சுட்டிக்காட்டிய ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ், மக்கள் மத்தியில் அரசாங்கம் தம்மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் ஊடாகவே அதனைச் செய்யமுடியும் எனத் தெரிவித்தார்.**

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் அறிமுகப்படுத்தப்பட்டு 76 வருடங்கள் பூர்த்தியடைந்திருப்பதை நினைவு கூரும் விதமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு விசேட உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீண்டும் "ஏ" தரத்தைப் பெற்றுக்கொண்டமை குறித்தும், ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு கிளை அலுவலகத்துடன் இணைந்து ஆணைக்குழு முன்னெடுத்துவரும் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் குறித்தும் தனது பாராட்டை வெளிப்படுத்திய ஐ.நா வதிவிடப்பிரதிநிதி, அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உருவாக்கத்தை நினைவு கூரும் அதேவேளை, அப்பிரகடனத்தில் உள்வாங்கப்பட்டுள்ள உரிமைகளின் முக்கியத்துவம் பற்றியும் சிந்தித்து செயலாற்றவேண்டும் என வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையைப் பொறுத்தமட்டில் மனித உரிமைகள் பாதுகாப்பு, ஊழல் ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பல் என்பவற்றை முன்னிறுத்தி கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை வரவேற்கின்றோம்.

அதேவேளை நாட்டின் பொருளாதார மீட்சிக்கும், வளர்ச்சிக்கும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டியது அவசியமாகும். குறிப்பாக இக்காலப்பகுதியில் பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகப்பிரிவினரின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும், அவர்களை இலக்காகக் கொண்ட சமூகப்பாதுகாப்பு செயல்திட்டங்களை வலுப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் - என்றார். (அ)

# பயங்கரவாத தடைச் சட்டம் குறித்து அடுத்த கட்ட நடவடிக்கை விரைவில்!

### நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



கொழும்பு, டிசெ. 12

பயங்கரவாத தடைச்சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பன தொடர்பில் அவசியமான அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என தான் வலுவாக நம்புவதாக தெரிவித்துள்ள நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, தாம் பெரும்பான்மை ஆணையை பெற்றிருப்பதை காரணம் காட்டி தன்னிச்சையாக செயற்படமாட்டோம் எனவும், சகல தரப்பினரதும் ஆலோசனைகளை பெற்று முன்னகர்வோம் எனவும் குறிப்பிட்டார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு "சர்வஜன நீதி" அமைப்பினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பலஸ்தீனத்துக்கும், இலங்கைக்கும் இடையில் நீண்ட கால நல்லுறவு காணப்படுகிறது. ஆகவே பலஸ்தீன விவகாரத்தில் உணர்வுபூர்வமாகவே செயற்படுவோம். நாடு என்ற ரீதியில் பலஸ்தீன மக்களுக்கு குரல் கொடுப்போம்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியன இயங்கு நிலையில் உள்ளன. இருப்பினும் இங்கே கூறப்பட்டதை போன்று பல்வேறு பிரச்னைகள் நிலவுவதை ஏற்றுக்கொள்கிறேன்.

குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பன தொடர்பில் அவசியமான அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என நான் வலுவாக நம்புகிறேன்.

அதேவேளை இச்சட்ட உருவாக்கங்களின்போது எமது அரசாங்கம் தொடக்கத்தில் இருந்து செயற்படவேண்டிய அவசியம் இருக்காது. ஏனெனில் ஏற்கெனவே பல்வேறு சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் நிலுவையில் உள்ளன. அவற்றை முன்னகர்த்தவேண்டும்.

மேலும், எமது அரசாங்கம் பெரும்பான்மை மக்களாணையை பெற்றுள்ளது. அதன் அர்த்தம் நாம் எதேர்ச்சதிகரமாக , தன்னிச்சையாக செயற்பட முடியும் என்பதல்ல, மாறாக எமது அரசாங்கம் முன்னெடுக்கும் முக்கிய நகர்வுகளில் நாம் சகல சம்பந்தப்பட்ட தரப்பினரதும், கருத்துக்களை கேட்டறிந்தே செயற்படுவோம் - என்றார். (அ)

# தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாத அரசு!

### சாடுகின்றார் சரித்த ஹேரத்



கொழும்பு, டிசெ. 12

தேர்தல் மேடைகளில் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளதாக, முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் மேடைகளில் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது.

அரிசிக்கு நாட்டில் சிக்கல் நிலை எழுந்துள்ளது. அரிசி விநியோக பொறிமுறை உரியவாறு நிர்வகிக்கப்படாமையே அதற்கு காரணமாகும்.

கடந்த அரசாங்கங்களின் ஆட்சிக் காலத்திலும் கூட அரிசி விநியோகப் பொறிமுறையில் சிக்கல் நிலைகள் காணப்பட்டன. ஆனால் அந்த அரசாங்கங்கள் உரியவாறு அந்த விடயத்தை கையாண்டமையை அவதானிக்க முடிந்தது.

ஆனால் இந்த அரசாங்கம் குறித்த விடயத்தை பூதாகரமாக்கியுள்ளது. அரசாங்கம் இந்த விடயத்தை உரியவாறு முகாமை செய்யாமையே இதற்கு காரணமாகும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org